(எஸ்.ஜீவராஜா)

கோலாலம்பூர், ஆக. 25-

ஓர் இந்திய பிரஜையான 48 வயது இல்லத்தரசி விஜயலட்சுமி நேற்று முன்தினம் தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் திடீரென ஏற்பட்ட பாதாள குழியில் விழுந்து காணாமல் போயுள்ள சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இதுவரை அவரின் ஒரு ஜோடி காலணியை மட்டுமே மீட்பு பணியினரால் கண்டுபிடிக்க முடிந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே ஆறு சாக்கடை கால்வாய்களில் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எந்தத் தடயங்களும் கிடைக்கவில்லை. இதனிடையே, ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் இம்மாதிரியான பாதாள குழிகள் ஏற்படும் அபாயம் குறித்து கடந்த 2015 இல் எச்சரிக்கை விடுக்கப்பட்ட விவகாரம் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. இது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

பக்கம் 13

- ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவை அதிகாரிகள் தினசரி கண்காணிக்க வேண்டும் - கணபதி ராவ்
- பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவத் தயார் - டி.மோகன்
- ரகசிய கேமராவில் பதிவான மனதை பதைபதைக்க வைக்கும் காட்சி
- விஜயலட்சுமி பாதாள குழியில் விழுந்த சம்பவம்: கிடைத்தது ஒரு ஜோடி காலணி மட்டுமே

# 2015 இல் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அதிகாரிகளின் அலட்சியம் காரணமா?



முதல்பக்கத் தொடர்ச்சி...

## 2015 இல் விடுக்கப்பட்ட....

லைலி பசீர் என்ற முகநூல் பயனர் ஒருவர் இது குறித்து 2015 இல் எச்சரித்திருக்கிறார். வசிப்பதற்கு பாதுகாப்பற்ற ஓர் இடம் கோலாலம்பூர். காரணம் அங்கு எந்த நேரத்திலும் பாதாள குழிகள் ரூபத்தில் பேரழிவு ஏற்படும் சாத்தியம் உள்ளது என்று அவர் அப்போது தமது முகநூல் பதிவேற்றத்தில் கூறியிருக்கிறார்.

வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வழக்கம்போல ஜாலான் மஸ்ஜித் இந்தியாவில் நடந்து சென்றுக்கொண்டிருந்த விஜயலட்சுமி, திடீரென அங்கு ஏற்பட்ட பாதாள குழியில் விழுந்து காணாமல் போனார். இச்சம்பவம் வீதியில் பொறுத்தப்பட்டிருந்த ரகசிய கேமராவில் பதிவாகி சமூக வலைத்தளம் மற்றும் எக்ஸ் தளத்தில் பேசும் பொருளாக உள்ளது.

தலைநகரின் மையப்பகுதியில் நிகழ்ந்துள்ள இந்த எதிர்பாராத சம்பவம் மக்கள் மத்தியில் பீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. சுமார் எட்டு மீட்டர் ஆழத்தில் விஜயலட்சுமி விழுந்துள்ளார். ஒரு ஜோடி காலணியைத் தவிர இதுவரை எந்த தடயங்களும் மீட்புப் பணியினரால் கண்டுபிடிக்க முடியவில்லை. மிகவும் பரபரப்பான ஜாலான் மஸ்ஜித் இந்தியா வணிகப் பகுதியில் அமைந்துள்ள விஸ்மா மெலாயுவிற்கு எதிர்புறம் இந்த ராட்ஷச பாதாள குழி ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, லைலி பசீர் என்ற அந்த முகநூல் பயனர் பதிவேற்றம் செய்திருந்த பாதாள குழிகள் பற்றிய எச்சரிக்கை இப்போது மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

யாரும் எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் எந்த நேரத்திலும் அங்கு (மஸ்ஜித் இந்தியா பகுதியில்) பாதாள குழிகள் ஏற்படலாம் என அவர் அதில் எச்சரித்திருந்தார்.

கோலாலம்பூர் அமைந்திருக்கும் இடம் 40 முதல் 60 விழுக்காடு சுண்ணாம்பு கற்கள் உள்ளவை. தொடர்ச்சியான மேம்பாடுகள், சீரற்ற, அலங்கோலமான கால்வாய் முறைகள், ஆங்காங்கே ஏற்படும் புதைமணல், பூமிக்கடியிலான நீரோட்டம், அளவுக்கதிகமான பாரம், அளவுகதிகமான நடமாட்டம், வானுயர கட்டடங்கள் ஆகியன இப்பேரிடர்களுக்கு காரணமாகும் என அந்த முகநூல் பயனர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப்போது விடுத்திருந்த இந்த எச்சரிக்கை இன்று உண்மையாகி விட்டது. இந்தியாவைச் சேர்ந்த விஜயலட்சுமி ஒரு பாதாள குழியில் விழுந்து மாயமானார்.

இதனிடையே, ஜாலான் மஸ்ஜித் இந்தியா பகுதியில் இம்மாதிரியான பாதாள குழி ஏற்பட்டிருப்பது இது முதல் சம்பவம் இல்லை என்பதால் அதிகாரிகள் அப்பகுதியை அணுக்கமாக கண்காணிக்க வேண்டும் என அப்பகுதியில் உள்ள வணிகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு முன்னதாக இதுபோன்ற ச்ம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆகக்கடைசியாக கடந்த ஜூன் மாதம் ஒரு பாதாள குழி இங்கு ஏற்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

சம்பந்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து அங்கு சாலை சுமார் ஒரு மாதத்திற்கு மூடப்பட்டதையும் அவர்கள் தெரிவித்தனர்.

மற்றொரு நிலவரத்தில், கோலாலம்பூர் மேயரும் இதர சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இனியாவது ஒவ்வொரு நாளும் ஜாலான் மஸ்ஜித் இந்தியா, மற்றும் தலைநகர் பகுதிகளையும் கண்காணிக்க வேண்டும் என கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கணபதி ராவ் தமது முகநூல் பதிவேற்றத்தில் கூறியிருக்கிறார்.

கோலாலம்பூர் மையப்பகுதியான ஜாலான் மஸ்ஜித் இந்தியா பகுதியில் தொடர்ச்சியான மேம்பாடுகளும் இதுபோன்ற சம்பவங்களுக்கு ஒரு காரணம் என அவர் கருத்துரைத்தார்.